செய்தி வெளியீடு எண். 316 நாள். 18.6.2009

<u>அரசுப் பொருட்காட்சி தொடக்க விழா</u>

தமிழ்நாடு அரசின் சார்பில், அரசுப் பொருட்காட்சி தொடக்க விழா 20.6.2009 மாலை 5 மணியளவில் திருநெல்வேலி மாநகராட்சி பொருட்காட்சித் திடல் அண்ணா கலையரங்கத்தில் நடைபெறுகிறது. மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு இரா.ஆவுடையப்பன் அவர்களின் தலைமையில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு பரிதி இளம்வழுதி அவர்கள் பொருட்காட்சியை தொடங்கிவைத்து விழாப் பேருரையாற்றுகின்றார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு சுற்றுச்சூழல், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு டி.பி.எம்.மைதீன்கான் அவர்கள், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா அவர்கள், வணக்கத்திற்குரிய மாநகராட்சி மேயர் திரு ஏ.எல்.சுப்பிரமணியன் அவர்கள், திரு எஸ்.ராமசுப்பு எம்.பி. அவர்கள், திரு வீ.கருப்பசாமிபாண்டியன் எம்.எல்.ஏ., அவர்கள், திரு என்.மாலைராஜா எம்.எல்.ஏ., ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு விழாச் சிறப்புரையாற்றுகின்றார்கள்.

மேலும், திரு பி.லிங்கம், எம்.பி.., அவர்கள், திரு சா.பீட்டர் அல்போன்ஸ், எம்.எல்.ஏ., அவர்கள், திரு எச்.வசந்தகுமார், எம்.எல்.ஏ., அவர்கள், டாக்டர் தி.சதன் திருமலைக்குமார், எம்.எல்.ஏ., அவர்கள், திரு மு.அப்பாவு, எம்.எல்.ஏ., அவர்கள், திரு பா.வேல்துரை, எம்.எல்.ஏ., அவர்கள், திரு சொ.கருப்பசாமி, எம்.எல்.ஏ., அவர்கள், திருநெல்வேலி மாநகராட்சி துணை மேயர் திரு கா.முத்துராமலிங்கம், மண்டலத் தலைவர் திரு பூ.சுப்பிரமணியன் அவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு எம்.கிரகாம்பெல் அவர்கள், வேளாண் விற்பனைக் குழுத் தலைவர் திரு ச.கணேசன் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குகின்றார்கள்.

இவ்விழாவில், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மு.ஜெயராமன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றுகின்றார்கள்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர் திரு சி.காமராஜ், இ.ஆ.ப., அவர்கள் விளக்கவுரையாற்றுகின்றார்கள்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் துணை இயக்குநர் திரு ஜீ.மணிகுமார் அவர்கள் நன்றியுரையாற்றுவார்.

விழாவில் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.

*****************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.